அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண்.135 / 2017
தேதி. 14.11.2017

## இந்திய கடலோர காவல்படையினர் துப்பாக்கிச் சூடு

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் கண்டனம்.

ராமேஸ்வரம் கடல்பகுதியில் தமிழக மீனவர்கள் மீது இந்திய கடலோர காவல்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டுவரும் நிலையில், பாதுகாப்புத் தரவேண்டிய இந்திய கடலோர காவல்படையே, தாக்குதல் நடத்தியிருப்பது மீனவர் சமூகத்தினரிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கும் என்பது நிச்சயம்.

இச்செய்தியை இந்திய கடலோர காவல்படை மறுத்திருக்கிறது. இருப்பினும் இது குறித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு தமிழக அரசு கடிதம் அனுப்பியிருப்பதாக அமைச்சர் ஜெயகுமார் தகவல் தெரிவித்திருக்கிறார்.

இதுபோன்ற சம்பவங்கள் இனியும் தொடராது என்பதை மத்திய அரசு உறுதிசெய்ய வேண்டும். தமிழக மீனவர்கள் நமக்கு பாதுகாப்பாக இந்திய கடலோர காவல்படை இருக்கிறது என்ற நம்பிக்கையோடும், பாதுகாப்பு உணர்வோடும் மீன் பிடிக்கச் செல்லக்கூடிய சூழ்நிலை உருவாக, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com